## மதுக்கரை நகராட்சியில் 14.05.2025ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.

**பொருள் எண்.01**

மதுக்கரை நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2025, மார்ச் 2025 மற்றும் ஏப்ரல் 2025–ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.6274/2024/சி1)

**அலுவலக குறிப்பு :**
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.643**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.02**

மதுக்கரை நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2025, மார்ச் 2025 மற்றும் ஏப்ரல் 2025–ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2452/2024/சி1)

**அலுவலக குறிப்பு :**
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.644**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.03**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.281/2025/அ3 நாள்.21.02.2025–ன்படி புதிதாக தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை நகராட்சிக்கு படை வீரர் கொடிநாள் 2024 (07.12.2024 முதல் 06.12.2025 வரை) நிதி வசூல் தொகையாக ரூ.1,50,000/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் உதவி இயக்குநர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலக கடிதம் ந.க.எண்.5439/2021/அ3 நாள்.02.04.2025–ன்படி மேற்காண் தொகை செலுத்த கோரப்பட்டுள்ளதால் மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் சேவைகளுக்கு பெறப்படும் விண்ணப்ப கட்டணங்களுடன் இணைத்து படைவீரர் கொடிநாள் தொகை வசூல் செய்வதற்கு கீழ்கண்ட விவரப்படி தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0414/2025/சி1)

| வ.எண். | விவரம் | வசூலிக்க வேண்டிய கொடிநாள் நிதி |
|---|---|---|
| 1 | பிறப்பு, இறப்பு சான்றிதழ் | 50 |
| 2 | புதிய சொத்துவரி | 100 |
| 3 | சொத்துவரி பெயர் மாற்றம் | 100 |
| 4 | புதிய காலியிட வரி | 100 |
| 5 | புதிய குடிநீர் இணைப்பு | 200 |
| 6 | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் | 100 |
| 7 | தொழில்வரி கேட்பு நிர்ணயம் | 100 |
| 8 | தொழில் உரிமக்கட்டணம் கேட்பு நிர்ணயம் | 100 |
| 9 | கட்டிட உரிமம் | 500 |
| 10 | மனை வரன்முறைப்படுத்துதல் | 500 |
| 11 | ஒப்பந்ததாரர்/ விநியோகதாரர்/ கட்டிட வரைபட வரைவாளர் பதிவு | 1000 |

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.645**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.04**

மதுக்கரை நகராட்சியில் காலியாக உள்ள ஒரு தட்டச்சர் பணியாளரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப்படி ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை விநியோகம் செய்வதற்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்துபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்துபுள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | எம். மகேந்திரன் | ரூ.2,86,840/– |
| 2 | ஃபானிபூஷன் இன்ஃப்ராடெக் பிரைவெட் லிட் | ரூ.2,92,875/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்துபுள்ளி கொடுத்துள்ள திரு. எம். மகேந்திரன் (ரூ.2,86,840/–) அவர்களின் ஒப்பந்துபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 0001/2025/சி1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.646**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.05</u>**

மதுக்கரை நகராட்சியின் நிர்வாகப் பணிகளுக்கு தேவையான காகிதங்கள். பதிவேடுகள், விண்ணப்ப படிவங்கள், கணினி ரசீதுகள் மற்றும் இதர எழுது பொருட்களை விலைக்கு வாங்கி இருப்புவைத்து அலுவல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே, 2025–2026ம் நிதி ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு தேவைப்படும் எழுது பொருட்களை திறந்த ஒப்பந்தப்புள்ளிகளின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்து தேவையானவற்றை கொள்முதல் செய்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.879/2023/டி1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.647</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.06</u>**

மதுக்கரை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.26 மதுக்கரை மார்க்கெட் பகுதியில் உள்ள காலியிடத்தில் கட்டப்பட்டு வரும் 19 வணிக கடைகள் உள்ளடக்கிய வணிக வளாகத்தை கட்டி முடிக்கப்படாத முன்னரே எவ்வித வருவாய் இழப்பும் ஏற்படாத வகையில் முன் ஏலம் நடத்தும் பொருட்டு பொது ஏலம் நடத்தும் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பொது ஏலம் நாளிதழ் விளம்பரம் செய்யவும், அதன் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0705/2025/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.648</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.07</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 குரும்பபாளையம், வார்டு எண்.23 அம்பேத்கார் நகர் மற்றும் வார்டு எண்.4 விவேகானந்தா சதுக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடத்தில் மராமத்து செய்யும் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 18.02.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திருவாளர். ஃபனி பூசன் இன்பராடெக் பிரைவெட் லிமிடெட், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.76% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.136/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.649**

1. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.
2. மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.08**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 அம்பேத்கார் சதுக்கம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தில் மராமத்து செய்யும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 18.02.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். J.B. Builders Pollachi. | மதிப்பீட்டினை விட 0.04% குறைவு |
| 2 | திருவாளர். GPK&CO., Pollachi | மதிப்பீட்டினை விட 2.63% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். J.B. Builders Pollachi. (மதிப்பீட்டினை விட 0.04% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.136–1/2024/இ1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.650</u>

1. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.
2. மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.09</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 சுப்பிரமணியர் வீதியில் உள்ள பொது கழிப்பிடத்தில் மராமத்து செய்தல் பணிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திருவாளர். ஃபனி பூசன் இன்பராடெக் பிரைவெட் லிமிடெட், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 1.61% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1917/2024/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.651</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24 நித்யானந்தம் நகர் மற்றும் ஹைவே சிட்டி ஆகிய பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், சுந்தராபுரம், கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 1.12% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், சுந்தராபுரம், கோயம்புத்தூர் (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.158/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.652**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10 பாரதி காலணி பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட குடிநீர் தொட்டிக்கு 7.5 HP தானியங்கி பேனல் போர்டு பொருத்துதல் பணிக்கு ரூ.0.36 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். எஸ்.பி. இன்ஜினியரிங், கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 3.16% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். எஸ்.பி. இன்ஜினியரிங், கோயம்புத்தூர் (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.214/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.653**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 மேபிள் கார்டன் பகுதியில் புதியதாக மின் மோட்டார் பொருத்தி பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.3.35 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், சுந்தராபுரம், கோயம்புத்தூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.82% அதிகம் |
| 3 | திருவாளர். எஸ்.பி. இன்ஜினியரிங், சாய்பாபா காலணி, கோயம்புத்தூர் | மதிப்பீட்டினை விட 0.04% குறைவு |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். எஸ்.பி. இன்ஜினியரிங், சாய்பாபா காலணி, கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.215/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.654**</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் JCB இயந்திரம் மூலம் குடிநீர் குழாய்களின் உடைப்புகள், மழைநீர் வடிகால், சிறுபாலங்களில் அடைப்புகள் மற்றும் மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றுதல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 02.04.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திருவாளர். ஃபனி பூசன் இன்பராடெக் பிரைவெட் லிமிடெட், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 3.22% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின்

ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.155/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.655**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17 விநாயகர் கோவில் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் பணிக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.03.2025–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், சுந்தராபுரம், கோயம்புத்தூர் | மதிப்பீட்டினை விட 0.95% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், கோயம்புத்தூர் (மதிப்பீட்டினை விட 0.95% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.213/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.656**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ராஜேஸ்வரி நகர் பகுதியில் அமைந்துள்ள கிணற்றில் உள்ள மோட்டாரினை மாற்றி HDPE குழாய் அமைத்து அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்வதற்கும் ஒப்படைப்பு பணியாக திருவாளர். S.P Engineering, கோயம்புத்தூர் அவர்களின் மூலம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 560/2025/இ1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>தீர்மானம் எண்.657</u>

1. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.
2. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

மதுக்கரை நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரும் 45 KVA திறன் கொண்ட Genset– ன் சாதாரண பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு Oil Filter, Fuel Filter, Copper Washer, etc., போன்ற பாகங்களை மாற்றி பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு M/s. Shield நிறுவனத்தால் ரூ.3735/–க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்வதற்கும் ஒப்படைப்பு பணியாக M/s. Shield நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 1779 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>தீர்மானம் எண்.658</u>

1. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.
2. மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 குரும்பபாளையம் பகுதியில் உள்ள ராக்கியண்ணன் கோவில் அருகில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு 09.04.2025–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். SHARVESH AND COMPANIES | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |
| 2 | திருவாளர். DURAISWAMI AND CO | மதிப்பீட்டினை விட 1.00% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். SHARVESH AND COMPANIES (மதிப்பீட்டினை விட 0.01% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.212/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.659</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.18</u>**

மதுக்கரை நகராட்சியானது அரசாணை எண்.116 நாள். 07.12.2021–ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் மதுக்கரை நகராட்சியின் பொறியியல் பிரிவில் இரண்டு பணி ஆய்வாளர், ஒரு படவரைவாளர் பணியிடம் காலியாக உள்ளது. தற்போது அனைத்துப் பணிகளையும் நகராட்சி பொறியாளர் மற்றும் பணிமேற்பார்வையாளரே மேற்கொள்ள நேரிடுகிறது. இவைகளால் பணிசுமை ஏற்படுவதுடன் பணிகளை மேற்கொள்வதில் காலதாமதமும் ஏற்படுகிறது.

இந்நிலையில் மேற்கண்ட பணியிடங்கள் நகராட்சியில் காலியாக உள்ளதால், மேற்கண்ட பணிகளை கண்காணித்து துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக தொழில்நுட்ப பணியாளர்களை பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதப் பட்டியலின் (SOR)–ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை விநியோகம் செய்வதற்கு, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சம் ஆகும். மேலும் திறந்த ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிகளின் படி ஒப்பந்த பணியாளரை பயன்படுத்திக் கொள்வதற்க்கும் அதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 683 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.660</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

மதுக்கரை நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் அனைத்து பிரிவுகளிலும் உள்ள அச்சுப்பொறி இயந்திரங்கள் மூலம் அச்சுபிரதிகள் (Print out) எடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் அச்சுபொறி இயந்திரங்களுக்கு டோனர்களை Refilling செய்து பயன்படுத்தபட வேண்டியது அவசியமானதாகும். எனவே நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளில் உள்ள அச்சுப்பொறி இயந்திரங்களுக்கு Toner Refilling செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 682/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.661**</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் 9 Nos, தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் 3 Nos, நீர் உந்து மேட்டார்கள் 17 Nos ஆகியவற்றில் உள்ள வால்வுகளை இயக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் நிரந்தர குடிநீர் பணியாளர்கள் யாரும் இல்லை. இதனால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. குடிநீர் விநியோக பணியானது அத்தியாவசியம் என்பதால் 2025-2026- ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் தினந்தோறும் குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு. மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.680 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.662**</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.21</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணறு 60 Nos, திறந்தவெளி கிணறு 11 Nos, ஆகியவற்றில் உள்ள வால்வுகளை இயக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் நிரந்தர குடிநீர் பணியாளர்கள் யாரும் இல்லை. இதனால் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி

குடிநீர் விநியோகம் செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. குடிநீர் விநியோக பணியானது அத்தியாவசியம் என்பதால் 2025-2026-ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் தினந்தோறும் குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 681/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.663</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 அன்பு நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அன்றாடம் அத்தியாவசிய தேவைக்கான உப்புதண்ணீர் வசதியில் பற்றாக்குறை இருப்பதால் அப்பகுதியில் சீரான முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே அப்பகுதியில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,20,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 679/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.664</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.23</u>

மதுக்கரை நகராட்சி அலுவலக முன்புறமுள்ள தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியிலிருந்து (Sump) சூட்டிங் ரேஞ்ச் மற்றும் அறிவொளி நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு மின் மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட பகுதிகளுக்குச் செல்லும் பிரதான குழாய்களில் குறிப்பிட்ட பகுதி மட்டும் (காவல் நிலையம் அருகில்) அடிக்கடி உடைந்து விடுவதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட உடையும் நிலையில் உள்ள M.S குழாயினை மாற்றி புதியதாக DI குழாய் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,60,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 678 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.665</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.24</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பில்லூர் அத்திக்கடவு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக 9 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், 3 தரைமட்ட தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் குடிநீர் பகிர்மானம் மேற்கொள்ளப்படும் போது குளோரின் கலந்து பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்குவது அவசியம் ஆகும். எனவே தற்போதைக்கு தேவையான குளோரின், பிளிச்சிங் பவுடர் போன்ற தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.677 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.666</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.25</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23 தர்மராஜ் நகர் பகுதியில் தற்சமயம் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாததால், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே தர்மராஜ் நகர் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.1.30 இலட்சத்திற்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.684 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.667</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ராஜேஸ்வரி நகரில் உள்ள சமுதாய கூடத்தில் அடிப்படை வசதியான பொதுகழிப்பிடம் பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்கு இல்லாததால், பொதுமக்களின் நலன் கருதி சமுதாய கூடத்தில் கழிப்பிடம் கட்ட வேண்டியது அவசியமானதாகும். எனவே சமுதாய கூடத்தில் புதியதாக கழிப்பிடம் கட்ட

தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6,00,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.685 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.668</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.27</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, ஆருரா கார்டன் பகுதியில் தற்சமயம் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாததால், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே ஆருரா கார்டன் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.0.80 இலட்சத்திற்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.686 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.669</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.28</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 25, அன்பு நகர் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் தற்சமயம் தனியாருக்குச் சொந்தமான இடத்தில் செல்வதால் தனியாரிடமிருந்து குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றதற்கிணங்க மேற்கண்ட தனியார் இடத்தில் செல்லும் பகிர்மான குழாய்களை சாலையின் ஓரத்தில் மாற்றி அமைப்பதற்கு ரூ.1.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.687 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.670</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.29</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள விடுபட்ட பகுதிகளில் புதியதாக LED தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ. 32.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 17.04.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் |
|---|---|
| 1 | M/S SCHNELL ENERGY EQUIPMENTS PVT LTD |
| 2 | M/s.KUMARAN INDUSTRIES |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் 22.04.2025 அன்று விலைப்புள்ளிகள் (Price bid) திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டது, அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | M/S SCHNELL ENERGY EQUIPMENTS PVT LTD | மதிப்பீட்டினை விட 2.54% அதிகம் |
| 2 | M/s.KUMARAN INDUSTRIES | மதிப்பீட்டினை விட 8.38% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S SCHNELL ENERGY EQUIPMENTS PVT LTD (2.54% மதிப்பீட்டினை விட அதிகம்) அவர்களிடம் விலை குறைப்பு செய்து தருமாறு 23.04.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டு கீழ்கண்ட விபரப்படி விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | M/S SCHNELL ENERGY EQUIPMENTS PVT LTD | மதிப்பீட்டினை விட 0.33% குறைவு |

எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S SCHNELL ENERGY EQUIPMENTS PVT LTD (மதிப்பீட்டினை விட 0.33% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.2308/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.671</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.30</u>

மதுக்கரை நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வரும் 45KVA திறன் கொண்ட Genset– ன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு Oil Filter, Fuel Filter, Copper Washer, etc., போன்ற பாகங்களை மாற்றி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு

ரூ.45,000/– ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 709 /2025/இ1).

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.672**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்கள், நீர் உந்து மோட்டார்கள், திறந்தவெளி கிணறு மோட்டார்கள் மற்றும் மதுக்கரை நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.710 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.673**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

. மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட மதுக்கரை மார்க்கெட் மாரியம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள திறந்தவெளி கிணறு மின் மோட்டார் மின் இணைப்பு பெட்டியானது மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் பாதுகாப்பின்றி உள்ளது. எனவே அதனை அகற்றிவிட்டு புதியதாக மின் இணைப்பு பெட்டி வைத்து மின் இணைப்பு சாதனங்களை மாற்றி அமைப்பதற்கு ரூ.0.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.707/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.674**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.33</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 மரப்பாலம் மற்றும் ஓம் பராசக்தி நகர் பகுதிக்கு தற்போது சரஸ்வதி நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து மரப்பாலம் இரயில்வே நுழைவு வாயில் வழியாக அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மரப்பாலம் இரயில்வே நுழைவு வாயில் பகுதியில் பாலம் வேலை நடைபெற இருப்பதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு வழங்கும் குடிநீர் விநியோகத்தில் தடை ஏற்படும் நிலை உள்ளது. எனவே ராஜேஸ்வரி நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து மரப்பாலம் மற்றும் ஓம் பராசக்தி நகர் பகுதிக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.60 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 708 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.675</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.34</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பாலக்காடு சாலையில் மாநில நெடுஞ்சாலைத் துறையினரால் புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட புறவழிச்சாலை அமையும் இடத்தில் அறிவொளி நகர் பகுதிக்குச் செல்லும் குடிநீர் பிரதான குழாய் அமைந்துள்ளது. எனவே புதிதாக அமைக்கப்பட்டு வரும் புறவழிச்சாலையில் மைல்கல் பகுதியில் சாலைப்பணிக்கு இடையூறாக உள்ள பிரதான குழாய்களை சாலையின் ஓரத்திற்கு மாற்றி அமைப்பதற்கு ரூ.12.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையினை நகராட்சிக்கு அளிப்பதற்கு மாநில நெடுஞ்சாலைத்துறையினரால் இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே புறவழிச்சாலை அமைக்கப்படும் இடத்தில் இடையூறாக உள்ள குடிநீர் பிரதான குழாய்களை ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாற்றி அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.819 /2024/இ1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்குத் தேவைப்படும் தொகையினை மாநில நெடுஞ்சாலைத்துறையினரால் அளிக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

<u>தீர்மானம் எண்.676</u>

1. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.
2. மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.35</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பில்லூர் – அத்திக்கடவு கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வரும் நிலையில் மதுக்கரை மார்க்கெட், மேட்டாங்காடு மற்றும் ராஜேஸ்வரி நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் உள்ள அளவு மானிகள் பழுதடைந்து விட்டதால் தினசரி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் அளவு கணக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் பழுதடைந்த அளவு மானிகளுக்குப் பதிலாக புதியதாக அளவு மானி வாங்கி பொருத்த தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 90,000/– (ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.743/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.677</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.36</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 குரும்பபாளையம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு அருகில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் பொது மக்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர். பிரபா இண்டஸ்ட்ரிஸ், அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.744 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.678</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.37</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகள், சமுதாயக்கூடம், நூலக கட்டிடம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கவும் அதனை புரணமைக்க வேண்டியதும் அவசியமானதாகும். எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள

தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 2.00/- இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்.745 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.679</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.38</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 வஞ்சியம்மன் கோவில் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான பூங்கா இடத்தில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே இருந்த மோட்டார் பழுதடைந்து மீண்டும் சரிபார்க்க இயலாத நிலையில் இருந்தது இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உப்பு தண்ணீர் வழங்க இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பூங்கா இடத்தில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 7.5 HP மோட்டார் பொருத்துவதற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்கள் விபரம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | M/s. SP ENGINEERING, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.05% குறைவு (ரூ.88,985/-) |
| 2 | M/s. MAHALAKSHMI CONSTRUCTIONS, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.03% குறைவு (ரூ.88,999/-) |
| 3 | M/s. SREE POWER ENGINEERS, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.02% குறைவு(ரூ.89,011/-) |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.SP ENGINEERING, COIMBATORE (மதிப்பீட்டினை விட 0.05% குறைவு ரூ. 88,985/-) அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டது. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 514/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

<u>தீர்மானம் எண்.680</u>

மன்றத்தில் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

<u>பொருள் எண்.39</u>

மதுக்கரை நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள தரைமட்ட தொட்டியிலிருந்து அறிவொளி நகர் மற்றும் சூட்டிங்ரேஞ் செல்லும் பிரதான குழாயில் (M.S Pipe) உடைப்பு ஏற்பட்டுள்ளதால் M.S Pipe யினை வெல்டிங் செய்தால் மட்டுமே அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலும். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ள (M.S Pipe யினை) பகுதியில் வெல்டிங் செய்வதற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் உள்ளுர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்கள் விபரம் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | M/s. SP ENGINEERING, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.05% குறைவு (ரூ.39,308/-) |
| 2 | M/s. MAHALAKSHMI CONSTRUCTIONS, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.03% குறைவு (ரூ.39,316/-) |
| 3 | M/s. SREE POWER ENGINEERS, COIMBATORE | மதிப்பீட்டினை விட 0.02% குறைவு(ரூ.39,322/-) |
| | | |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. SP ENGINEERING, COIMBATORE (மதிப்பீட்டினை விட 0.05% குறைவு ரூ.39,308/-) அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டது. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 57(7) ன் கீழ் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 559/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

<u>**தீர்மானம் எண்.681**</u>

மன்றத்தில் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

<u>பொருள் எண்.40</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26, சிவசக்தி நகர் பகுதியில் தற்சமயம் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாததால், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே சிவசக்தி நகர் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.0.35 இலட்சத்திற்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 0775 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.682</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.41</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 தமிழன்னை வீதியில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3,60,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது (ந.க.எண். 0772 /2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.683</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.42</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 சிதம்பரனார் வீதியில் உள்ள பொதுமக்கள் கடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும் சிறுபாலம் இல்லாமல் மிகவும் சிரமபடுவதால் அப்பகுதியில் புதியதாக நான்கு இடங்களில் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2,20,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது
(ந.க.எண். 0774/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.684</u>**

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.43</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 காளியம்மன் கோவில் முதல் சாய்ராம் டிரேடிங் கம்பெனி வரை உள்ள பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அன்றாடம் அத்தியாவசிய தேவைக்கான உப்புதண்ணீர் வசதி ஏதும் இல்லாததால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே அப்பகுதியில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,60,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆகும்.

மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 773/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.685</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.44</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரையுள்ள அனைத்து வார்டுகளிலும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதையும், அவ்வப்பொழுது கண்டறியப்படும் பழுதுகளையும் உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 694 /2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.686</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.45</u>

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் அமைந்துள்ள பொதுகழிப்பிடத்தில் கழிவுநீர் உறிஞ்சும் (லீச்பிட்) தொட்டி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக திருவாளர். சர்வேஸ் அன் கம்பெனி, கோயம்புத்தூர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.701/2025/இ1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.687</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.46</u>

மதுக்கரை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தினசரி சேகரிக்கப்படும் கழிவுகளை நகராட்சிக்குட்பட்ட பாலக்காடு சாலையில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மைத்திற்கு கொண்டு சென்று அதில் மக்கும் கழிவுகளை

செயல்முறைப்படுத்தி உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் உரங்களை விவசாய பயன்பாட்டிற்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விற்பனை இல்லாத காலங்களிலும், விற்பனை போக மீதம் உள்ள உரங்களை பாதுகாப்பான முறையில் சேமித்து வைப்பதற்கான கொட்டகை இல்லை. எனவே நகராட்சியில் தயாரிக்கப்படும் உரங்களை பாதுகாப்பான முறையில் சேமித்து வைப்பதற்கு பாலக்காடு சாலையில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரமையம் (MCC) அருகில் உரம் சேகரிக்கும் கொட்டகை (Shed) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.795/2025/எச்1)

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.688</u>

மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 14.05.2025

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி